# எஹெலியகொட பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 05 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 04 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நொவம்பர் 25 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய எஹெலியகொட பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எஹெலியகொட பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையினது நிலையான வைப்புக்களது பெறுமதி ரூபா 2,030,000 ஆகிய போதும், அப் பெறுமதி ரூபா 2,000,000 ஆக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் ரூபா 30,000 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) அவிசாவலை தேசிய சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,000,000 நிலையான வைப்பு 2012 டிசெம்பர் 10 ஆந் திகதியன்று காசாகப் பெறப்பட்ட போது அதற்கெனப் பெறப்பட்ட ரூபா 30,000 வட்டியானது ஆண்டிற்கான வட்டியாகக் கணக்கிலிடப்படவில்லை.

(இ) வர்த்தக அனுமதிப்பத்திம் மற்றும் வியாபார வரிக் கணக்குகளுக்குரிய உள்ளவாறான பெறுவனவுகளை உப பதிவேட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 56,480 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டியாகப் பெறவேண்டிய வட்டி ரூபா 95,275 ஆகும். எனினும், இறுதிக் கணக்குகளில் அது ரூபா 200,721 ஆகக் காட்டப்பட்டமையால் வட்டி வருவாய் ரூபா 105,446 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) நீதிமன்றத் தண்டப் பணக் கணக்கின் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதி ரூபா 2,191,290 ஆகும். முன்னைய ஆண்டுகளின் பொருட்டுப் பெற்ற தொகை ரூபா 4,451,381 ஆகையால் வித்தியாசமாகிய ரூபா 2,260,091 நீதிமன்றத் தண்டப் பணக் கணக்கிலிருந்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அங்கீகாரங்கள் மேற்கொள்ளவில்லை. அவ்வாறே, ஆண்டிற்கான ரூபா 2,500,000 விலைப்பட்டியலில் எதுவுமே மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெறவில்லை. மேற்குறிப்பிட்ட சீராக்கல்களைச் செய்யாமையால் நீதிமன்றத் தண்டப் பணக் கணக்கின் இறுதி மீதி ரூபா 239,909 ஆகியதுடன் இறுதி மீதி ரூபா 2,260,091 குறைத்துக் காட்டப்பட்டுமிருந்தது.

(ஊ) கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 4 கணக்கீட்டு விடயங்களது 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத்தொகைக்கும் உப பதிவேட்டின் படியான மீதிகளது கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 178,291 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) முத்திரைக் கட்டணப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட தொகை ரூபா 8,522,218 ஆகும். எனினும், அது கணக்கில் ரூபா 8,494,618 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 27,600 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து தவணை ரீதியில் பெறப்பட்ட மொத்தக் கடன் ரூபா 12,962,806 ஆகும். இக் கடனானது ஐந்தொகையில் கடன் மூலதனமாகக் காட்டப்படாததுடன் அத்தொகையின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மூலதனமாக்ககப்படவுமில்லை. மேலும், வங்கிக் கணக்கில் மேற்படி கடன்தொகையில் எஞ்சிய ரூபா 164,842 கடன் மூலதனமாக்கப்பட்டுக்

கணக்கிலிடப்பட்டிருந்தது. குறித்த கடனின் மீளாய்வாண்டிற்கான வட்டியாகிய ரூபா 623,488 குறித்த செலவினத் தலைப்புகளில் வரவு வைக்கப்படவில்லை. கொடுப்பனவு செய்யப்படாத இத்தொகை நடைமுறைப் பொறுப்பாக காட்டப்படவில்லை.

(ஏ) பத்துச் சந்தர்ப்பங்களுக்குரிய மீளாய்வாண்டிற்கான செலவினக் கடன் கொடுத்தோரின் கீழ் ரூபா 93,679 க்கான நிதியேற்பாடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான செலவினமும் ஆண்டின் இறுதிக் கடன்கொடுத்தோர் மீதியும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 7,091,624 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 164,609 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,004,452 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 2012 ஜூலை தொடக்கம் காசேட்டில் மேலதிகப் பற்று ஏற்படும் விதத்தில் காசோலைகள் வரையப்பட்டிருந்தன. 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதி ரூபா 1,017,536 ஆகும். வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் 6 மாதங்களைக் கடந்த 66 காசோலைகளது பெறுமதி ரூபா 376,858 ஆகவிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணத்தின் 395(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிறுவனத்தில் சமயாசமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்குப் போதிய பணம் இல்லாதலால் அவிசாவளை தேசிய சேமிப்பு வங்கியின் 2-0057-01-43731 இலக்க நிலையான வைப்பாகிய ரூபா 1,000,000 மீளப்பெறப்பட்டு அதில் ரூபா 500,000 இதற்கெனப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந் நிலையான வைப்பு 12 சதவீத வட்டி வீதத்தில்

2013 ஜுன் 09 ஆந் திகதி முதிர்ச்சியடையவிருந்தது. 6 மாதங்களுக்கு முன்னர் திருப்பிப் பெறப்பட்டதால் ரூபா 30,000 மாத்திரம் வட்டியாகப் பெறப்பட்டிருந்தது. இதற்கமைய, ஏறக்குறைய ரூபா 90,000 சபைக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 7,954 | 3,721 | 5,031 |
| (ii) | குத்தகை வாடகை | 4,485 | 3,601 | 862 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,057 | 746 | 75 |
| (vi) | பிற வருவாய் | 6,714 | 561 | - |

### 2.3.2 குத்தகை வாடகை

பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில் உள்ள கடைக்கு முறையாக வாடகை செலுத்தப்பட்டமையால் சபையானது 24577 ஆர்.ஈ எனும் இலக்க வழக்கின் மூலம் வழக்குத் தொடுத்திருந்தது. அதற்கமைய, 2007 ஏப்ரல் 01 முதல் 2008 ஒக்டோபர் 30 வரை 15 ஆம் இலக்கக் கடையினது வாடகை நிலுவையாகிய ரூபா 69,750 அறவிடப்படுவதற்கான வழக்குத் தீர்ப்பிற்கமைய 10 தவணைகளில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனத் தீர்ப்பாகியபோதும், கணக்காய்வுத் தினமான 2012 நொவம்பர் 06 ஆந் திகதியன்றும் மேற்படி தொகையில் ரூபா 23,011 கொடுப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் நிலுவையை அறவிடுவதற்கு மீண்டும் நீதிமன்றத்திற்குச் செல்லவுமில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 239,909 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,500,000 |

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெறும் வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு அவை தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரித்திருந்த போதும், கணக்காய்வுத் தினமான 2012 நொவம்பர் 06 ஆந் திகதி வரை 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவது மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்தது. பதிவேட்டின் பிரகாரம் 613 தொழில்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் அறவிடப்பட வேண்டிய ரூபா 227,325 அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) மற்றும் 132 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது சமய,புண்ணிய, கலாசார, சுகாதார, விநோத கல்வி அல்லது நலனோம்பல் நடவடிக்கைகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூபா 1,000 க்கு மேற்பட்ட செலவினத்திற்கு முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெற வேண்டுமாயினும், சபையானது ரூபா 1,668,905 பெறுமதியான கீழ் குறிப்பிட்ட உதவிக்கு அவ்வாறான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

| | ரூபா |
|---|---|
| சீலிங் தகடு | 556,200 |
| சமையலறை உபகரணம் | 223,600 |
| பிற | 889,105 |
| | 1,668,905 |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) முறையாக திறந்த கூறு விலைகளைக் கோரி பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் கூறு விலைளைக் கோராது 2012 ஆம் ஆண்டின்போது 02 தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 749,700 செலவில் 980 நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2012 வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் நலனோம்பல் சேவைகளை மேற்கொள்வதற்கான செலவினத் தலைப்பின் கீழ் நிதியேற்பாடு முடிவுற்றதன் பின்னர் 2012 நொவம்பர் மாதமளவிலும் நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 5,606,668 செலவிடப்பட்டிருந்தது.

(இ) தீர்வைப் வரிப் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கு நாளாந்தச் சம்பள அடிப்படையில் இரு ஊழியர்களை வேலைக்கமர்த்தி 2011 செப்தெம்பர் 09 தொடக்கம் நாளாந்தச் சம்பளமாக ரூபா 182,550 கூட்டுத்தொகையாக வழங்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 ஒக்தோபர் 04 ஆந் திகதிய CLG 333R இலக்கக் கடிதத்தின் பிரகாரம் இப் பணியானது முகாமைத்துவ உதவியாளர், நிகழ்ச்சித்திட்ட உதவி உத்தியோகத்தர்கள் ஆகியொர் மூலம் நிறைவேற்றப்பட வேண்டியதொரு கடமையாகும். ஆகவே, சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் தொழிலாளர்களைர் பயன்படுத்தி இக்கடமையை நிறைவேற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அதற்கு முரணாக ஊழியர்களைப் பணியமர்த்தி நாளாந்தச் சம்பளம் வழங்ககப்பட்டிருந்தது.

(ஈ) 2012 மே 29 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2012 ஆம் இலக்கச் சுற்றறிக்கை விதிகளுக்கு முரணாக மக்கள் பிரதிநிதியிடம் வாகனம் ஒன்று உள்ளது உறுதி செய்யப்படாது 2 மக்கள் பிரதிநிதிகளுக்கு எரிபொருள் படியாக ரூபா 30,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது ரூபா 1,012,925 பெறுமதியான பண்டங்கள் விநியோகிகப்பப்பட்டிருந்தன.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கத்தவர் முன்மொழிதல்கள் சபையில் முன்வைக்கப்படவில்லை.

(ஆ) முன்னுரிமைப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்படவில்லை.

(இ) வீதிகளுக்கமைய, பொருள் மூலமான உதவிகளைப் பெறக் கூடிய நிறுவனங்களும் நபர்களும் இனங்காணப்படவில்லை.

(ஈ) பண்டங்களது விநியோகம் தொடர்பான விபரமிருக்கவில்லை.

**2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

(அ) சமயாசமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 46 ஊழியர்கள் 6 மாதங்கள் தொடக்கம் 04 ஆண்டுகள் வரையில் சேவையில் ஈடுபட்டிருந்த போதும், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2012 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 532,945 ஊழியர் சேமலாப நிதியமாகவும் ரூபா 79,942 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாகவும் அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 386(6) ஏற்பாடுகளுக்கு முரணாக 24 சந்தர்ப்பங்களில் சம்பளக் கடன் முற்பணமாக ரூபா 1,821,145 பெறுமதியான திறந்த காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) நிதிக்கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்